**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக் கிழமை பிரசங்கம்**

**19 ஆகஸ்ட் 2016 / 16 துல்கஃதா 1437**

# <u>மற்றவர்களுடன் கிருபையாக நடந்து கொள்ள வேண்டுமென்ற உயிரோட்டச் சிந்தனை</u>

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْرًا وَنَذِيْرًا وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُنِيْرًا وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும் அவன் நமக்குத் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” (பக்தியை) உறுதி செய்து கொள்வோமாக! சோதனைகள் மிக்க

இவ்வாழ்க்கையில் சகிப்புத் தன்மையுடன் அச்சோதனைகளை எதிர்கொள்வதற்கு அல்லாஹ் நமக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

கடந்த வெள்ளிக்கிழமையில், இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீது கொண்டிருந்த கிருபையைப் பற்றி விவாதிக்கப்பட்டது. இன்று, மற்றவர்களுக்கு - அவர்களின் பலதரப்பட்ட மத நம்பிக்கைகளைப் பொருட்படுத்தாமல்- ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் காட்டிய ”ரஹ்மத்” (கிருபையை) ப்பற்றி விவாதிக்க இருக்கின்றோம்.

ஜமாஅத்தார்களே!

”ரஹ்மத்” என்பது மற்றவர்களுடன் நாம் பழகும் போது மிகவும் முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய பண்பாகும். ஒரு சமுதாயம் சிறப்பாக அமைவதற்கும், அது அமைதியாக, அபிவிருத்தியுடன் வாழ்வதற்கும் உதவியாக, ஊடகமாக இருந்து செயல்படுவது ”ரஹ்மத்” ஆகும். குறிப்பாக, பல சமுதாய மக்கள் வாழ்கின்ற சிங்கப்பூர் போன்ற நாட்டுச் சூழலில் ”ரஹ்மத்” (கிருபைச் சிந்தனையை) க்கடைப்பிடிப்பது மிகவும் அவசியமாகும்.

நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கிருபை மிக்கவர்களாக இருந்தார்கள். அவர்கள் எங்கு சென்றாலும் கிருபைச் சிந்தனை அவர்களிடம் பிரதிபலித்தது. தன்னை விட வயதில்

மூத்தவர்களிடம் பேசும் போது கிருபையுடன் நடந்து கொண்டார்கள். பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவழிக்கும் போது கிருபையுடன் அவர்களைப் பராமரித்து, அவர்கள் மீது அக்கறை செலுத்தினார்கள். பலவித நம்பிக்கை கொண்டவர்களுடன் அவர்கள் பழகும் போது அன்புடன் பழகினார்கள். அவர்களுக்கு அமைதியும் அபிவிருத்தியும் ஏற்பட வேண்டுமென விரும்பினார்கள்.

முஸ்லிம்கள், பலதரப்பட்ட நம்பிக்கைகளைக் கொண்டுள்ள நண்பர்களுடன் பழகும் போது பின்பற்ற வேண்டிய ஒரு முக்கியக் கொள்கையை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான். அதுதான், அவர்களுடன் அன்பாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்வதாகும். ”அல்-மும்தஹனா” எனும் அத்தியாயத்தின் 8-வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

لَا يَنْهَاكُمُ ٱللَّهُ عَنِ ٱلَّذِينَ لَمْ يُقَٰتِلُوكُمْ فِى ٱلدِّينِ وَلَمْ يُخْرِجُوكُم مِّن دِيَٰرِكُمْ أَن
تَبَرُّوهُمْ وَتُقْسِطُوٓا۟ إِلَيْهِمْ ۚ إِنَّ ٱللَّهَ يُحِبُّ ٱلْمُقْسِطِينَ ﴿٨﴾

பொருள்: மார்க்க (விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை - நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான்.

மேற்கண்ட வசனமாகிறது, ஒரு "முஃமின்" (ஓரிறை நம்பிக்கையாளர்) மற்ற தனிநபர்களுடன் பழகும் போது - அவர்கள் மாறுபட்ட நம்பிக்கைகளைக் கொண்டிருந்த போதிலும்- நேர்மையாக நடந்து கொள்ள வேண்டுமென விவரிக்கின்றது. இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தான், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களுடன் பழகும் போது நீதமாக நடந்து கொண்டார்கள் என பல ஹதீதுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதை நாம் காணலாம். இங்கு, நாம் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காக ஒரு வரலாற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் காலத்தில், ஒரு முஸ்லிம் திருட்டுக் குற்றத்தைச் செய்யும் நிலையில் பிடிபட்டார். அவரை இஸ்லாமியத் தண்டனையிலிருந்து பாதுகாப்பதற்காக, சில மக்கள் அவர் செய்த குற்றத்தை, எவ்வித குற்றமும் செய்யாத ஒரு முஸ்லிமல்லாத சகோதரர் மீது சுமத்தி விட முயற்சித்தார்கள். பின்பு அவர்கள் அந்த விவகாரத்தை இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார்கள். எனவே, இச்சம்பவத்தின் உண்மை நிலையை விளக்கி பல வசனங்களை அல்லாஹ் திருக்குர்ஆனில் அருளினான். அவற்றில் ஒன்று, "அன்னிஸா" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 105-வது வசனம் ஆகும்:

إِنَّآ أَنزَلۡنَآ إِلَيۡكَ ٱلۡكِتَٰبَ بِٱلۡحَقِّ لِتَحۡكُمَ بَيۡنَ ٱلنَّاسِ بِمَآ أَرَىٰكَ ٱللَّهُۚ
وَلَا تَكُن لِّلۡخَآئِنِينَ خَصِيمٗا ١٠٥

பொருள்: (நபியே!) அல்லாஹ் உமக்கு அறிவித்ததைக் கொண்டு, நீர் மனிதர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக, முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நிச்சயமாக நாம் உம்மீது இறக்கியுள்ளோம்; எனவே சதி மோசக்காரர்கள் சார்பில் வாதாடுபவராக நீர் ஆகி விடாதீர்.

இறை வசனங்கள் ஒரு சூழ்நிலையை விளக்குவதற்காக மட்டும் அருளப்பட்டதில்லை. அனைத்து முஸ்லிம்களுக்கு வழிகாட்டுதலாகவும் அவை அருளப்பட்டுள்ளன. தோல், நிறம், தோற்றம் மற்றும் இனம் போன்றவற்றைப் பொருட்படுத்தாமல், வித்தியாசம் பார்க்காமல் மனிதகுலம் அனைவரிடமும் நீதமாகவும் கிருபையாகவும் நடந்து கொள்ள வேண்டுமென அல்லாஹ் கட்டளையிடுவதாக இது போன்ற வசனங்கள் விளக்குகின்றன.

ஜமாஅத்தார்களே!

பல சவால்களாலும் தொழில் நுட்ப வளர்ச்சிகளாலும் நிரப்பமாக உள்ள தற்கால உலகில், தொழில் நுட்ப வளர்ச்சிகளால் பயனில்லை என நாம் மறுக்க முடியாது. எனினும், நாம் இத்தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதில் புத்திசாலிகளாக இல்லையெனில் பலவித சவால்கள் மற்றும் பிரச்சனைகளுக்கு அத்தொழில் நுட்பங்களே காரணமாகி விடும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, சமுதாயத்தின் தனிநபர்களுக்கிடையே பகைமையை, குரோத மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில், சில தனிநபர்கள் அடிக்கடி மதத்தைப் பயன்படுத்தி வருவதை நாம் காண்கிறோம். திருக்குர்ஆன் வசனங்கள் மற்றும் ஹதீதுகளுடைய சொற்களின்

வெளிப்படையானப் பொருள்களை மட்டும் அறிந்து கொண்டு அவ்வாறு செய்கிறார்கள். அவை அருளப்பட்டதற்கான பின்னணி மற்றும் சூழ்நிலைகளைக் கவனத்தில் கொள்வதில்லை. சன்மார்க்க நூல்களைப் பற்றிய அறிவு ஞானங்கள் அவர்களிடம் குறைவாக இருப்பதால் பல இன மக்களுக்கிடையே பகைமை ஏற்பட அவர்கள் காரணமாகி விடுகிறார்கள்.

தீவிரவாதிகளாக மாறிவிட்ட சில தனிநபர்கள், வன்முறை நடவடிக் கைகளில் ஈடுபட்டு பலரின் மரணத்துக்குக் காரணமாகிக் கொண்டிருக் கின்றார்கள் என்று நாம் படிக்கின்றோம்; கேள்விப்படுகின்றோம். தமது கருத்துகளுக்கு மாற்றமான கருத்துக்களைக் கொண்டுள்ளவர்கள் - அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் மற்றவர்களாக இருந்தாலும்- கொல்லப்பட வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்.

இவற்றை, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் காண்பிக்கப்பட்ட நீதமாகவோ, கிருபையாகவோ கருத முடியுமா?

பகைமை கொள்வதையும் கொலை செய்வதையும் அல்லாஹ் வன்மையாகக் கண்டிக்கின்றான்; தடை செய்கின்றான். திருக்குர்ஆனின் ”அல்-மாயிதா” எனும் அத்தியாயத்தின் பின்வரும் 32-வது வசனத்தில் அல்லாஹ் கூறும் கருத்துக்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

“நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான்; மேலும், எவரொருவர் ஒரு ஆத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்”

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இன்றைய குத்பா பிரசங்கத்திலிருந்து பின்வரும் கருத்துக்களை நாம் தீர்மானமாகக் கூறலாம்:

**முதலாவதாக**, இனம் மற்றும் சமய வித்தியாசங்களைக் கடந்து மக்களுடன் தொடர்பு கொண்டு பழகுவதானது - அவை சன்மார்க்கக் கொள்கைகளுக்கு முரண்படாமலிருக்கும் வரை- ஆர்வமூட்டப்படுகிறது. காரணம், அது அனைவருக்கும் அமைதி மற்றும் அபிவிருத்தி ஏற்படக் காரணமாக உள்ளது.

**இரண்டாவதாக,** தீமைகள், அடக்குமுறைகளை, முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்கள் யார் செய்தாலும் சரி, அவர்கள் நேர்மையாக நடத்தப்படுவது அவசியமாகும்.

இதுதான், அல்லாஹ் கூறும் ”ரஹ்மத்” (கிருபை) ஆகும். இவ்வகையானக் கிருபை தான் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் காட்டியதாகும். எனவே, மற்றவர்களுடன் பழகும் போது இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் காண்பிக்கப்பட்ட கிருபையை, கருணைச் சிந்தனையை ஆர்வத்துடன் பின்பற்றும் ஆற்றலை நாம் பெறுவோமாக! அதன் மூலம் நமது நாட்டின் அமைதியையும் அபிவிருத்தியையும் அனைவரும் இணைந்து அனுபவிப்போமாக! ஆமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.